எனது இல.: EST/7/04/LON/0202

அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07

2015.08.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**<u>தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துதல்</u>**

**<u>பண்டிகை முற்பணம்</u>**

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவின்பால் தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. கூறப்பட்ட பிரிவின் உட் பிரிவுகள் 13.2 மற்றும் 13.5 ஆகியவற்றைப் பின்வருமாறு திருத்துவதற்கு 2015.06.24 ஆம் திகதியில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

13:2. அலுவலர்களது விருப்பத்திற்கேற்றவாறு ஏதாவதொரு வருடாந்த விழா தொடர்பாக ரூபா 10,000/- பண்டிகை முற்பணத் தொகையை பெற்றுக் கொள்ள முடியும். 3:5 உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை கழிக்கப்படும் விதம் இம் முற்பணத் தொகைக்கு ஏற்புடையதாகாது. இம் முற்பணத் தொகைக்கு வட்டி அறவிடப்பட மாட்டாது.

13:5. இம் முற்பணத் தொகையானது எட்டு (08) மாத கால தவணைகளில் அல்லது தேவை ஏற்படின் அதற்கு முன்னர் அறவிடப்படல் வேண்டும். மொத்தத் தொகையை அறவிட்டு முடிவதற்குள் அலுவலரின் சேவைக்காலம் முடிவுறுத்தப்படும் பட்சத்தில் அலுவலர் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய ஏதேனும் கடன் இருப்பின், அதனுடன் சேர்த்து இம் முற்பணத் தொகையிலிருந்து அறவிட வேண்டியுள்ள மீதியையும், அவ் அலுவலருக்கு வழங்கப்பட வேண்டிய நிதியிலிருந்து முதலில் கழிக்கப்படல் வேண்டும். அவ்வாறு சேவை முடிவுறும் என எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில், சேவை முடிவுறுவதற்கு முன்னர் முற்பணத் தொகை முழுவதையும் அறவிடக்கூடியவாறு, அறவிடப்படும் தவணைகளின்

ஒப்பம்/ஜே. தடல்லகே

செயலாளர்

அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி மற்றும்

சனநாயக ஆட்சி அமைச்சு